2020 செப்டம்பர் 16]

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

12—

மின்மாற்றி

***43423—திரு. சபா. ராசேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சி, மாளிகம்பட்டு குடியிருப்புப் பகுதி தெற்கு தெருவிற்கு தனியாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில் மாளிகம்பட்டு ஊராட்சி, தெற்கு தெருவில் புதிய மின்மாற்றி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். 1–3–2019 அன்று ஒரு புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தக் கேள்வியை இதற்கு முன்பாகக் கேட்டிருப்பார் என்று நினைக்கின்றேன். அங்கு இப்போது 50 சதவிகிதம் அளவிற்குத்தான் மின்பளு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வேறு ஏதாவது பகுதியில் அதுபோன்ற நிலை இருக்குமென்று சொன்னால், உடனடியாக அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.*

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மை எல்லாம் ஆளாக்கிய பெருந்தகைகள், நாளை பிறந்தநாள் காணும் தந்தை பெரியார், நேற்று பிறந்த நாள் கண்ட பேரறிஞர் அண்ணா, அதேபோல முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். 'ஒன்றிணைவோம் வா' என்னும் அற்புதத் திட்டத்தின்மூலம் கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் ஏழை எளியவர்களின் பசியாற்றி, பொதுமக்களுக்குத் தேவையான அவசர, அவசிய உதவிகள் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத்தின் தலைவர் அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காணொலிக் காட்சிமூலம் திறப்பு விழா நடத்தி, பல சாதனைகளைச் செய்து வரும் கழகத் தலைவர் அவர்கள், அதன் நீட்சியாக நாளை மாலை நெய்வேலியிலே முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய சிலையைத் திறக்க இருப்பதற்கும் எனது மனமார்ந்த நன்றியினை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, மாளிகம்பட்டு ஊராட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, SS 19 100 K.V.A. மின்மாற்றியின் திறனை அதிகப்படுத்திக் கொடுத்திருப்பது உண்மைதான். அதற்கு அடுத்ததாக இருக்கிற SS 20 மின்மாற்றியிலே, 100 வீட்டு மின் இணைப்புகள் உள்ளன. மேலும், 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்குகின்றன. அந்தப் பகுதியிலே குடிசைத் தொழிலாக முந்திரி பருப்பு பதப்படுத்துகின்ற தொழில் இயங்குகின்றது. இதனால் மின்பளு அதிகமாக இருக்கின்றது. அந்த மின்பளுவைக் குறைக்கின்ற வகையிலே ஒரு புதிய மின்மாற்றியை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியில், மின்மாற்றி ஏற்கெனவே மாற்றப்பட்டு இருக்கின்றது. இப்போது சொல்கின்ற பகுதி அதே பகுதியா

2020 செப்டம்பர் 16]

அல்லது வேறு பகுதிக்குக் கேட்கின்றாரா என்று தெரியவில்லை. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே அவர் சொன்னதைப்போல, மாளிகம்பட்டு ஊராட்சியில் 95 குடிசை வீடுகள் உட்பட 241 வீடுகள் இருக்கின்றன; 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இயங்குகின்றன; 2 கோயில் இணைப்புகள் இருக்கின்றன; 109 குடிசை மின் இணைப்புகள் இருக்கின்றன. மொத்தம் 358 மின்னிணைப்புகள்தான் இருக்கின்றன. இருந்தும்கூட 50 சதவிகிதம் அளவுக்குத்தான் மின்பளு இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது வேறு பகுதியா அல்லது அதே பகுதியா என்று தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற பகுதியில் மின்பளு அதிகமாக இருந்தது என்று சொன்னால், உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து, மின்மாற்றியின் பளுவை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே பகுதிதான். அந்தப் பகுதியில் முந்திரி தொழில் செய்கின்ற விவசாயிகள், மனுக்களைக் கொடுத்து கடந்த இரண்டு மாதக் காலத்திற்கு மேலாகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கூடுதல் மின்பளு தேவைப்படுகின்ற காரணத்தினால்தான் அவர்களின் மனு காத்திருப்பிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறேன். மின் உபயோகத்தில் கூடுதல் மின்னழுத்தம், குறைந்த மின்னழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் இருப்பதற்கும், சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கும் இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். நெய்வேலியிலிருந்து மற்ற பகுதிகளுக்கு மின்சாரம் எடுத்துச் செல்கின்ற வகையிலே, என்னுடைய நெய்வேலி தொகுதி, காட்டுக்கூடலூர் ஊராட்சியிலுள்ள முடப்பள்ளி கிராமத்தில் ஒரு 400 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருப்பதாக அறிகிறேன். எனவே, கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் பயன்படக்கூடிய அளவில் அந்தப் பரிசீலனையை விரைவுபடுத்தி

அங்கு தானியங்கி துணை மின் நிலையம் அமைத்தால் உதவியாக இருக்கும். எனவே, அந்தத் துணை மின் நிலையத்தின் பணிகளை விரைந்து, துரிதப்படுத்தி செயல்படுத்தினால் சீரான மின்சாரம் இந்த மூன்று மாவட்டங்களுக்கும் கிடைக்கும். குறிப்பாக, கடலூர் மாவட்டம் பெரிய அளவில் பயன்பெறும் என்பதைத் தெரிவித்து, அதனைத் துரிதப்படுத்தி செய்து கொடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, முந்திரி தொழிற்சாலை விவசாயிகள் முந்திரி பதனிடுவதற்காக L.T. connection கேட்டிருக்கிறார்கள் என்றும், காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் மின்சாரத் துறையில் ஓர் ஆணையிட்டிருக்கின்றார்கள். வீடுகளுக்கு மின் இணைப்பு என்றால், அதாவது ஒரு கம்பத்திலிருந்து அந்தக் connection எடுக்கப்படுவதாக இருந்தால் 'one day connection' என்று, அதனை உடனடியாக 24 மணி நேரத்தில் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல், L.T.–யைப் பொறுத்தவரைக்கும் 7 நாட்களில் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல் அவர்கள் ஏன் காத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு அதிகாரிகளுடன் கலந்து ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்தப் பகுதியில் மின்மாற்றி தேவை என்று சொன்னால் அதை உடனடியாகச் செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே 400 K.V. Sub Station ஒன்று வேண்டும் என்றும், அதற்காக இடம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். அது உண்மைதான். நெய்வேலி நிருவாகத்திடம் இடம் கேட்டிருந்தோம்; அவர்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பாக அதற்கான

2020 செப்டம்பர் 16]

இடத்தினைக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, அதற்கான மாற்று இடத்தினைத் தற்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாற்று இடம் பார்த்து, அதற்கான பணிகள் மேற்கொள்வதைவிட, தற்போது கடலூரில் இருக்கின்ற 230 K.V. Sub Station-ஐ 400 K.V. Sub Station ஆக தரமுயர்த்த வேண்டும் என்ற எண்ணம் அரசிடம் இருக்கின்றது. துணை மின் நிலையம் வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் சட்டமன்றத்தில் சொல்லி வருவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். மின் பளு இல்லாமல், மின்னழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் எண்ணம். துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பகுதிகளில் இடங்களைத் தேர்வு செய்து கொடுப்பார்கள் என்று சொன்னால், உடனடியாக அதனைச் செய்து கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க கிட்டத்தட்ட 500 துணை மின் நிலையங்களை அமைத்துள்ள அரசு இந்த அரசு. விவசாயத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் சீரான மின்சாரம் வழங்க வேண்டும் என்பதற்காக 500 துணை மின் நிலையங்களை கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த அரசு அமைத்திருக்கின்றது. ஆக, துணை மின் நிலையம் கேட்பவர்களுக்கு நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றோம். எந்தெந்தப் பகுதிகளிலே மின்னழுத்தம் குறைவாக உள்ளதோ அந்தப் பகுதிகளில் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர்களும் உதவி செய்து, அந்த இடங்களைத் தேர்வு செய்து கொடுப்பார்கள் என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும். இடம் தேர்வு செய்து கொடுப்பதற்கு காலதாமதமாகும் என்று சொன்னால், தற்போது கடலூரில் உள்ள 230 K.V. Sub Station-ஐ 400 K.V. Sub Station ஆகத் தரமுயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.